# எஸ்ஐ தேர்வு எழுதும் போலீசாருக்கு பயிற்சி

## டிஐஜி தொடங்கி வைத்தார்



வேலூர் காவலர் மண்டபத்தில், நேற்று நடந்த எஸ்ஐ தேர்வு எழுதும் காவலர்களுக்கான பயிற்சி பட்டறையை டிஐஜி ஆனிவிஜயா தொடங்கி வைத்து பேசினார்.

வேலூர், மே 23: தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழக காவல் துறைக்கு 444 எஸ்ஐ தேர்வு செய்ய அறிக்கை வெளியிட்டது. இதில் ஏற்கெனவே காவல் துறையில் பணிபுரிந்து வரும் தகுதியுடைய காவலர்களுக்கு 20 சதவீத இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியிடத்திற்கு ஆயிரக்கணக்கான காவலர்கள் மற்றும் இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனர். எஸ்ஐ பணிக்கான எழுத்துத்தேர்வு ஜூன் மாதம் 22ம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில், வேலூர் மாவட்டத்தில் பணியாற்றும் காவலர்களுக்கு எஸ்ஐ தேர்வு எழுதுவது குறித்து பயிற்சி பட்டறை வேலூர் காவல்துறை மற்றும் நியூபேஸ் பவுண்டேஷன் சார்பில் காவலர் மண்டபத்தில் நேற்று நடந்தது. பயிற்சிக்கு வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்தார். எஸ்பி ராஜேஷ்கண்ணன் முன்னிலை வகித்தார்.

இதில், டிஐஜி ஆனி விஜயா பேசுகையில், 'வேலூர் மாவட்டத்தில் எஸ்ஐ தேர்வை 1,500 பேர் எழுத உள்ளனர். அதே போல் மற்ற மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கானோர் எழுத உள்ளனர். இதில் போட்டிகள் அதிகம். போட்டியை எதிர்கொள்ள தனித்திறமை அவசியம்.

இந்த பயிற்சி பட்டறையில் கூறும் பயிற்சிகளை கூர்ந்து கவனித்தால் தேர்வு எளிதாக இருக்கும். வாழ்க்கையில் அனைவருக்கும் திறமைகள் இருக்கும்.

ஆனால் உங்களின் திறமையை நீங்கள் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் வாழ்க்கையில் முன்னேற திருப்புமுனை தேவைப்படும். அந்த திருப்புமுனையாக இந்த எஸ்ஐ தேர்வை நீங்கள் பயன்படுத்திக்கொண்டு உங்கள் வாழ்க்கையில் முன்னேறி செல்ல வேண்டும்' என்றார்.

தொடர்ந்து, நகர திட்டமிடல் துறை மூத்த ஆராய்ச்சி உதவியாளர் சுப்பிரமணியன், மணிகண்டன் ஆகியோர் எஸ்ஐ தேர்வில் வெற்றி பெற வழிகள் குறித்து விரிவாக எடுத்து கூறினர். இதில், ஏடிஎஸ்பி சுந்தரமூர்த்தி, டிஎஸ்பி திருநாவுக்கரசு மற்றும் போலீசார் பலர் கலந்து கொண்டனர்.